# மவுண்ட் றூயிட் தமிழ் கல்வி நிலையம்

## Mount Druitt Tamil Study Centre

*Mobile: 0449 892 066*

*Email :*mtdruitttsc@gmail.com *Web :* www.mtsc.org.au


# பேச்சுப் போட்டி 2021
## ஆண்டு 3

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் வணக்கம்

## நல்ல நண்பர்கள்

நண்பர்கள் நமது சந்தோசத்திலும் துக்கத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். அது மட்டுமன்றி எமது வெற்றிக்கும், தோல்விக்கும் பெரும்பாலான நேரங்களில் நண்பர்களே காரணமாய் இருக்கிறார்கள். அதனால்தான் நமக்கு அமையும் நண்பர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

நல்ல நண்பர்கள் நாம் உயர்ந்த நிலையை அடையவும், தீய நண்பர்கள் நாம் தாழ்ந்து போகவும் காரணமாகிறார்கள். கெட்ட பழக்க வழக்கங்களை கற்று தந்து தவறான பாதையில் வழிகாட்டிச் செல்வார்கள். இதனையே “கூடா நட்பு கேடாய் முடியும்“ என்று பழமொழியும் கூறுகிறது.

எனவே நல்ல நண்பர்களோடு பழகுவோம். நட்புறவுடன் வளர்வோம் எனக்கூறி விடைபெறுகிறேன்.

நன்றி

வணக்கம்



ஆக்கம் : ஆசிரியர் திருமதி. அனிதா சிவசங்கர்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 29.05.2021 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.